**சுருக்கம்**

தொழில் – விதி 110ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) – தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்காக அரசு ரூ.100 கோடி ரூபாயை ஒரு முறை மூலதனமாக வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழில் (எம்.ஐ.எப்.2) துறை

அரசாணை (நிலை) எண்.239 நாள் : 30.09.2015

மன்மத, புரட்டாசி –13

திருவள்ளுவர் ஆண்டு 2046

**ஆணை:**

29.09.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) தொடர்பாக கீழ்க்கண்ட தொழில் வளர்ச்சி திட்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:

தமிழ்நாட்டில் தொழில் வளத்தை பெருக்கும் பொருட்டு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC), முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை ஊக்குவித்து சிறப்பான முறையில் நிதியுதவி வழங்கி வருகிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்காக அரசு 100 கோடி ரூபாயை ஒரு முறை மூலதனமாக வழங்கும். இந்த மூலதனத்திற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (TIDCO) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனமும் (SIPCOT) தலா 50 கோடி ரூபாயினை வழங்கும்.

2. மேற்காணும் திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு தேவைப்படும் நிதியினை பெறுவதற்கும் தகுந்த கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலர்/மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அவர்களை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. வி. சங்கர்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைச் செயலர்/மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், 692, அண்ணா சாலை, சென்னை–600 002.

முதன்மைச் செயலர்/மேலாண்மை இயக்குநர்,

டிட்கோ, 19–ஏ, ருக்குமணி இலட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை–600 008.

மேலாண்மை இயக்குநர், சிப்காட், 19–ஏ, ருக்குமணி இலட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை–600 008.

நகல்

சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத்துறை, சென்னை–600 009.

தொழில் (அ.ந.மு.2/வ.செ.தி.1) துறை, சென்னை– 600 009.

இ.கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30.9.2015

பிரிவு அலுவலர்